DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 8

| | | |
|---|---|---|
| Name | : | கருணாநிதி (Lw - 9) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 15.04.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 13.02.2021ம் தேதி 13.30 மணிக்கு நாமக்கல் அரசு தலைமை மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற அடிதடி தகவலை பெற்று மருத்துவமனை சென்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த பூங்கொடி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண்.158/2021 சட்டப்பிரிவு 294(b), 323, 324, 506(2) IPC ஆக வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நீதிமன்றத்திற்கும் ஒரு நகலை உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு மற்றொரு நகலை இவ்வழக்கின் விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் திரு.சேகர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். **(**முதல் தகவல் அறிக்கை அ**.**சா**.**ஆ**.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** இது சம்மந்தமாக இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திரு.சேகர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட தேதியில் இருந்து மூன்று நாட்கள்

கழித்துதான் எனக்கு அடிதடி தகவல் கிடைத்தது என்றால் சரியல்ல ஏற்கனவே நிலைத்தில் தகவல் கொடுக்கப்பட்டிருந்தது நான் வேலை சம்மந்தமாக வெளியூர் சென்றுவிட்டதால் உடனடியாக மருத்துவமனைக்கு செல்ல இயலவில்லை. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் தகவல் கிடைத்ததாக சொல்லப்படும் தேதியாக 13.02.2021ம் தேதியைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 10.02.2021 என்றால் சரிதான்.

மேற்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய ஏற்பட்ட காலதாமத்திற்கான காரணத்தை எனது முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது முதல் விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு முதற்கட்ட விசாரணை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. நான் பொய்யாக புகார் வாக்குமூலத்தினை பெற்று அதன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**